**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் எண்.1,
கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.4/2026, இடைக்கால மனு எண்.5/2026 மற்றும் இடைக்கால மனு எண்.6/2026**

**in**

**அசல் வழக்கு எண். 223/2004**

1. மேரி (இறப்பு)
2. அற்புதராஜ் (இறப்பு)
3. பாக்கியராஜ்
4. திருமதி. பிரேமா
5. திருமதி. செல்வி, க/பெ. லேட். அற்புதராஜ்
6. ராஜேஷ்பாபு, த/பெ. லேட். அற்புதராஜ்
7. ராஜேஷ்கண்ணா, த/பெ. லேட். அற்புதராஜ்

... 1 முதல் 4 மனுதாரர்கள் / 5 முதல் 7 வரையிலானவர்கள் உத்தேசதரப்பினர்கள்

/ VS /

திரு. S. லூர்து அந்தோணி, .. எதிர்மனுதாரர்

இந்த இடைக்கால மனுகள் இன்று 31.07.2026 இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் கீழ்காணும் உத்தரவு காணப்படுகிறது.

**பொது உத்தரவு**

1. மேற்படி மூன்று இடைக்கால மனுக்களும் ஒரே வழக்கின் தொடர்ச்சியாகவும், 2–ம் வாதியின் இறப்பினால் ஏற்பட்ட வாரிசு சேர்க்கை தொடர்பான ஒரே காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதாலும், ஒன்றுக்கொன்று

தொடர்புடையவை என்பதாலும், இம்மனுக்கள் அனைத்தையும் பொறுத்து ஒன்றாகவே இந்த பொது உத்தரவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**(i)** இடைக்கால மனு எண். 4 / 2026 ஆனது அசல் வழக்கு எண். 223/2004–ல் இறந்துபோன 2–ம் வாதி அற்புதராஜ் அவர்களின் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட 127 நாட்கள் காலதாமதத்தை மன்னிப்பதற்காக சட்டப்பிரிவு சி.பி.சி. பிரிவு 151 மற்றும் காலவரையை சட்டம் பிரிவு 5–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(ii)** இடைக்கால மனு எண். 5 / 2026 ஆனது அசல் வழக்கு எண். 223/2004–ல் 2–ம் வாதியின் இறப்பினால் ஏற்பட்ட காலவதியை (Abatement) நீக்குவதற்காக (Set aside abatement) சி.பி.சி. ஆணை 22 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(iii)** இடைக்கால மனு எண். 6 / 2026 ஆனது அசல் வழக்கு எண். 223/2004–ல் இறந்துபோன 2–ம் வாதி அற்புதராஜ் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளான 5 முதல் 7 மனுதாரர்களை அசல்வழக்கில் 5 முதல் 7 வாதிகளாகச் சேர்த்து வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்காக சி.பி.சி. ஆணை 22 விதி 3 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **இடைக்கால மனு எண்.4/2026, 5/2026 மற்றும் 6/2026 மனுகளின் சுருக்கம்:–**

2.1, அசல் வழக்கு O.S. No. 223/2004 ஆனது தாவா சொத்தினை பொறுத்து மனுதாரர்கள் / வாதிகள் அனுபவித்து வருவதில் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது **என்றும் நிரந்தரத்** தடையுறுத்துக்கட்டளை, பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்நிலையில் மேற்படி வழக்கானது நிலுவையில் உள்ள நிலையில் 2–வது வாதியான அற்புதராஜ் என்பவர் கடந்த 22.11.2025 இறந்துவிட்டார் என்றும், சட்டப்படி 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளை வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றும், இந்நிலையில் அவரது சட்டப்பூர்வ வாரிசுகளான அவரது மனைவி திருமதி. செல்வி (5–வது மனுதாரர்) மற்றும் மகன்கள் ராஜேஷ்பாபு (6–வது மனுதாரர்), ராஜேஷ்கண்ணா (7–வது மனுதாரர்) ஆகியோர்களில், 6–வது மனுதாரர் பாதிரியார் பட்டத்திற்காக வெளியூரில் படித்துக் கொண்டு

இருப்பதாலும், 5–வது மனுதாரரான தாயார் உடல்நிலை சரியில்லாமல் வெளியூரில் மருத்துவம் பார்த்து வந்ததாலும், 7–வது மனுதாரர் தாயாரைப் பராமரித்து வெளியூரிலேயே இருக்க நேரிட்டதாலும், வழக்கறிஞரை உடனடியாக நேரில் சந்தித்து விவரங்களைத் தெரிவிக்க இயலாமல் போனது. இதனால் 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்ய முடியாமல் 127 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றும் இக்காலதாமதம் தற்செயலானது என்றும், இதில் எந்தவித உள்நோக்கமும் அலட்சியப்போக்கும் இல்லை என்றும், காலதாமதத்தை மன்னித்து, வழக்கின் காலவதியை நீக்கி, இறந்துபோன 2-ம் வாதியின் வாரிசுகளான 5 முதல் 7 மனுதாரர்களை வாதிகளாகச் சேர்க்க அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமும் பாதிப்பும் ஏற்படும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பானது அளிக்கப்பட்டும் அவர் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுகள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5. தீர்வு:–**

6.1 இரு தரப்பிலும் வழக்காவணங்களும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து வாதிகள் அனுபவித்து வருவதில் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது **என்றும் நிரந்தரத்** தடையுறுத்துக்கட்டளை பரிகாமும், சுவாதீன பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. இந்த இடைக்கால மனுவானது அசல் வழக்கானது நிலுவையில் இருந்த நிலையில், 2-வது வாதி அற்புதராஜ் இறந்துவிட்டதால், அவரது மனைவியும்

மகன்களுமான 5 முதல் 7 மனுதாரர்கள் இவ்வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு அவசியமான தரப்பினர்களாக சேர்க்க கோரியும், மேற்படி தரப்பினராக சேர்க்க கோரி மனுவினை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் காலதாமதாக தாக்கல் செய்ததை மன்னிக்ககோரியும், அதனால் ஏற்பட்ட Abatement உத்தரவை நீக்க கோரியும் இந்த இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.3 மேற்படி இடைக்கால மனுகளில் 2–வது மனுதாரருக்கு தாங்கள் தான் மனுதாரர்கள் என்று 5 முதல் 7 மனுதாரர் தெரிவித்துள்ளார்கள். மேலும், தங்களை தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்வதற்காக ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்து மனுதாரர்கள் தங்களது மனுவில், 6 வது மனுதாரர் வெளியூரில் தங்கி படிப்பதாகவும், 5 மனுதாரருக்கு உடல்நிலையில்லாமல் சிகிச்சை எடுத்தாகவும், 7 மனுதாரர் உடல்நிலை சரியில்லாத தனது தாயாரான 5 மனுதாரரை கவனித்துக்கொள்ள இருந்ததாகவும், கூறியுள்ளார்கள்.

6.4 இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 2 வது மனுதாரரின் வாரிசுகள் தான் 5 முதல் 7 நபர்கள் என்பதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் எவ்விதமான மறுப்பு தெரிவிக்கவில்லை. எனவே 2–வது மனுதாரரின் வாரிசுகள் 5 முதல் 7 வரையிலான நபர்கள் என்று 2–வது நபரின் வாரிசுகள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்து மனுதாரர்கள் தங்களது மனுவில் கூறியுள்ள காரணமானது இந்நீதிமன்றத்தினால் முழு அளவில் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஏன்னெனில் அதற்கான ஆவணங்கள் எதையும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் மேற்படி மனுதாரர்கள் அசல் வழக்கானது பிராது சொத்து தொடர்பான முக்கிய பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 2-வது வாதி அற்புதராஜ் இறந்துவிட்டதால், அவரது மனைவியும் மகன்களுமான 5 முதல் 7 மனுதாரர்கள் இவ்வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு அவசியமான தரப்பினர்கள் (Necessary Parties) என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனவே இவ்வழக்கினை நீதியின் முறையில் விசாரணை செய்வதற்கு மேற்படி தரப்பினர்கள் உரிய தரப்பினர்கள் என்பதாலும், அசல் வழக்கானது

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நிலையிலும், இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனுகள் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 31.07.2026 நான் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.31 16:57:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

2. எதிர்மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.31 16:58:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.